பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆவணி 27 (12—9—72) செவ்வாய் வெளியூர்: ஆவணி 28 (13—9—72) புதன் [இதழ்: 75

தொழிலாளர் பணத்தை முடக்கிய நிறுவனங்கள்

வழக்குத் தொடரப்பட்டது

கல்கத்தா, செப். 12—

தொழிலாளர் பிராவிடண்டு நிதியைக் கட்டுவதற்குத் தவறிய இரண்டு பெரிய கல்கத்தா நிறுவனங்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இந்த இரு நிறுவனங்களும் சுமார் ரூ. 14 37 இலட்சம் அளவுக்குப் பிராவிடண்டு நிதி கட்டாமல் இருக்கின்றனவாம்.

செப். 15-- அண்ணா பிறந்த நாள்

தமிழகமெங்கும் விழா ஏற்பாடுகள்

தலைநகரில் வரலாறு படைக்கும் ஊர்வலம்---பொதுக்கூட்டம்

சென்னை செப். 12—

செப்டம்பர் 15--நம் அண்ணன் பிறந்த நாள்--திக்கெட்டும் கொண்டாடும் திருநாள் ஆகும்.

அண்ணனின் அறுபத்துநான்காம் ஆண்டு பிறந்த நாளை சீரோடும் சிறப்போடும் நாடெங்கிலும் கொண்டாடுமாறு நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்களும்--பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இந்த வேண்டுகோளுக்கேற்ப, நாடெங்கிலுமுள்ள கிளைக் கழகங்கள், துணை--சார்பு மன்றங்கள், கழகத் தொழிலாளர் அமைப்புகள், கழக மாணவர் அமைப்புகள் ஆகிய அனைத்தும் அண்ணா பிறந்த நாளை--முந்திய ஆண்டுகளையெல்லாம்விடச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுவருகின்றன.

தலைநகரான சென்னையில் மாவட்டக் கழகம், அண்ணா பிறந்த நாளையும்--கழகம் பிறந்த நாளையும் இணைத்து மகத்தான விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை நகரம் இதுவரையில் கண்டிராத அளவுக்குப் புதிய வரலாறு படைக்கும் மாபெரும் ஊர்வலம், 17—9—72 அன்று நடைபெறவிருக்கிறது; அதே நாளில், கடற்கரைச் சீரணி அரங்கில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறவிருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, ஆந்திர--கருநாடக--கேரள மாநிலங்களிலும், பம்பாய்--ஆமதாபாத்--டில்லி--கல்கத்தா போன்ற பெரு நகரங்களிலும், தமிழர் வாழும் கடல் கடந்த நாடுகளிலும் அண்ணா பிறந்தநாள் விழா, தமிழர்தம் குடும்ப விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது; இந்த ஆண்டும் வழக்கம் போல் அங்கெல்லாம் விழாக் கொண்டாடப்பெறும் என்பதில் ஐயமில்லை.

செப்டம்பர் 15 முதல் 30-ஆம் நாள் வரை இரண்டு கிழமைக் காலம் அண்ணா பிறந்த நாள் விழாவாக ஆங்காங்கே வாய்ப்பு வசதிக்கேற்பக் கொண்டாடலாம்; விழா நிகழ்ச்சிகளில் கழகத்தவர் மட்டுமன்றிக் கழகத் தோழமைக் கட்சியினரையும் பங்கு கொள்ளச் செய்யலாம்.

இத்தொடர்பில் பொதுச்செயலாளர் நாவலர் அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கருத்தில் கொள்வது நலமாகும்.

"அண்ணா அவர்கள் போதித்த கடமை--கண்ணியம்--கட்டுப்பாடு ஆகியவைகளுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்.

'பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைகளையும்--அவர் கொண்டிருந்த இலட்சியங்களையும் மக்கட்கு எடுத்து விளக்கும் வகையில், சொற்பொழிவுகள்--இன்னிசைக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியும், கழகக் கொடியேற்றுதல்--அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்துவைத்தல்--குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குதல்--ஏழைகட்கு உணவு அளித்தல்--பள்ளிச் சிறார்களுக்குப் புத்தகம் மற்றும் எழுதுபொருட்கள் வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டும், சிறப்பான ஊர்வலங்கள் நடத்தியும் விழா நாட்களைப் பெருமைக்குரிய வகையில் கொண்டாடுமாறு கழகத்தின் மாவட்ட--வட்ட--பகுதிக் கிளைகளின் நிர்வாகிகள்--தோழர்கள், கழகத் துணை சார்பு மன்றங்களின் நிர்வாகிகள்--தோழர்கள், கழகச் சார்பான தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள்--தோழர்கள் ஆகியோரை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.'"

பொதுச்செயலாளரின் மேற்கண்ட வேண்டுகோளை ஏற்று ஒவ்வொரு கழக அமைப்புகளும் செயல்படுவதன் மூலம் அண்ணா அவர்கட்குக் காட்டவேண்டிய மரியாதையையும்--நன்றியுணர்வினையும் வெளிப்படுத்திக் கொள்ள முன்வரும் என்று நம்புகிறோம்.

அண்ணா அவர்கள் நம்மோடு வாழ்ந்தார்; நமக்கு வழிகாட்டியாக--ஈடு இணையற்ற தலைவராக விளங்கினார்; நம்மைவிட்டு மறைந்துவிட்டார் எனினும், 'நமக்கு இன்றும் தோன்றாத் துணையாக இருந்துவருகிறார்' என்ற உணர்வு நமக்கு ஏற்பட இப்படிப்பட்ட விழாக்கள் பயன்படும்.

அண்ணா அவர்கள் நமக்கு வழங்கியுள்ள அறிவுரைகள்--கருத்துரைகள் இந்தத் தலைமுறைக்கு மட்டுமன்றி எதிர்காலத் தலைமுறையினருக்கும் அழியாத சாசனமாகும்; இதனை இளந் தலைமுறையினர் உணரத்தக்க வகையில் விழா நிகழ்ச்சிகளை அமைத்திடல் வேண்டும்.

ஆங்காங்கு கொண்டாடப்படும் விழா நிகழ்ச்சிகளிலும் ஊர்வலங்களிலும் பெருவாரியான மக்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அண்ணா இன்று நம்முடன் இருந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் விழாக் கொண்டாடுவோமோ அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியும் எழுச்சியும் கொண்டு--அண்ணன் புகழ்பாடி இன்புற வேண்டும் என நமது கழகத் தோழர்களுக்கு அறிவுறுத்த விழைகிறோம்.

வறட்சியைத் தணிக்க

'வருண ஜெப'மாம்

ஐதராபாத், செப். 12—

ஆந்திரத்தில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து மழை பெய்யாமல் இருப்பதால், ஆந்திரம் முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது; இதைபொட்டி, ஆந்திரத்தில் உள்ள எல்லாக் கோவில்களுக்கும் உத்தரவு ஒன்றை அரசு பிறப்பித்திருக்கிறது; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"மழை பெய்வதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் கோவில் நிர்வாகிகள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வருண பகவானின் கருணையைப் பெறுவதற்காக நாள்தோறும் சிறப்பாகப் பிரார்த்தனைகள் நடத்த வேண்டும்.

பழங்கால வேதங்கள்--சாஸ்திரங்களில் உள்ளபடி இந்தப் பிரார்த்தனைகள் நடத்தப்பட வேண்டும்."

இந்தத் தகவலை, ஆந்திர அறநிலைய அமைச்சர் மூர்த்திராசு தெரிவித்தார்.

தாய்மொழியிலேயே அரசு நிர்வாகம்

பஞ்சாப் அரசின் கண்டிப்பு

சண்டிகார், செப். 12—

"அன்றாட வேலைகளுக்குப் பஞ்சாபியைத் தவிர வேறு மொழியைப் பயன்படுத்தும் அதிகாரிகள் தகுந்த முறையில் தண்டிக்கப்படுவர்" என்று பஞ்சாப் அரசு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

"ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்திவருவது, 1967 பஞ்சாப் ஆட்சி மொழிச் சட்டத்துக்கு விரோதமானதாகும்" என்று அரசு வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது.

"இச்சட்டத்திற்கு எதிராக அதிகாரிகள் செயல்படுகிறார்களா என்பதைக் கண்டறிய இனிமேல் 'பைல்'கள் முறையாக அவ்வப்போது கண்காணிக்கப்படும்" என்று அரசு தெரிவித்திருக்கிறது.

இரயில்வே அமைச்சரின் 'பிடிவாதப் போக்கு

வேலைக்குத் திரும்பினால்தான் பேச்சு நடத்த இயலுமாம்

புதுடில்லி, செப். 12—

இரயில்வே லோகோ ரன்னிங் தொழிலாளர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தத்தைச் சுமூகமான முடிவுக்குக் கொண்டுவரக் கோரித் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும்--இரயில்வே அமைச்சர் டி. ஏ. பாய்க்கும் தந்தி மூலம் விடுத்துள்ள வேண்டுகோளுக்குப் பிறகும் (விவரம் 2-ம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது) உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பதிலாகப் பிடிவாதப் பேக்கையே இரயில்வே அமைச்சர் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

"வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு வேலைக்குத் திரும்பினாலன்றி பேச்சுவார்த்தை எதுவும் நடத்துவதற்கில்லை" என்று திரு. டி. ஏ. பாய் அறிவித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

பாகிஸ்தான் மேலும் சிதறும்

துண்டு போட எதிர்க்கட்சிகள் தீவிரம்

புதுடில்லி, செப். 12—

தற்போது இலண்டனிலுள்ள சில எதிர்க்கட்சித் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு எதிராகச் சதித் திட்டம் வகுத்து வருவதாகப் பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் மௌலானா கௌசர் அலி கூறியதாக பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

பாகிஸ்தானின் 4 மாகாணங்களும், பாகிஸ்தான் ஒரே நாடாக இருக்கவேண்டும் என்பதை விரும்பவில்லை என்று கூறியதாக வானொலி தெரிவிக்கிறது.

விலைவாசி உயர்வு

2 சதவிகிதம் அதிகரிப்பு

புதுடில்லி, செப். 8—

ஜூலை நடுவிலிருந்து ஆகஸ்டு 19 வரையிலான காலத்தில், விலைவாசிகள் தொடர்ந்து ஏறிக்கொண்டு வந்திருக்கின்றன.

மொத்த விலைக் குறியீட்டு எண் 208 1-ஆக இருந்தது; இது, கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்த நிலவரத்தைவிட 8 2 சதவிகிதம் அதிகமாகும்.

1972 ஜூலைத் திங்கள் நடுவில் 2 சதவிகிதம் அதிகரித்தது.

தென் மாநிலங்களில் வன விலங்குகள் புகலிடம்

ரூ. 3·3௦ கோடியில் திட்டம்

திருவனந்தபுரம், செப். 12—

தமிழ்நாடு--கேரளம்--மைசூர் ஆகிய மூன்று மாநிலங்களின் எல்லைகளில் உள்ள முதுமலை--பந்திப்பூர்--வைநாடு ஆகிய வன விலங்குகளின் புகலிடங்களை மேம்பாடு செய்வதற்கு, ரூ. 3.36 கோடி செலவில் ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முதுமலைப் பகுதிக்கு ரூ. 91 இலட்சமும், பந்திப்பூர் பகுதிக்கு ரூ. 1.70 கோடியும், வைநாடு பகுதிக்கு ரூ. 75 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதுமலை, பந்திப்பூர், வைநாடு, ஆகியவை வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவை; இருப்பினும், இவை அடுத்தடுத்து 4864 சதுர மைல் பரப்பில் அமைந்துள்ளன; எனவே, இப்பகுதியை ஒரு மொத்தமாக மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இரயில்வே லோகோ ஊழியர்கள் வேலைநிறுத்த எதிரொலி

‘பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள சங்கடம்--சாமான் போக்குவரத்துத் தடைபடுவதால் ஏற்படும் துன்பங்களை மனதில் கொள்வீர்’

‘ஊழியர்களின் மூன்று கோரிக்கைகளை ஏற்றுச் சுமூகச் சூழ்நிலை ஏற்பட வழிகோலுவீர்’

‘வேலைநிறுத்தம் நின்றபின் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்’ -- தலைமையமைச்சருக்கு முதலமைச்சர் தந்தி

சென்னை, செப். 10—

இரயில்வே லோகோ ரன்னிங் ஊழியர்களின் மூன்று கோரிக்கைகளை ஏற்று — அவர்களுடைய வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தந்தி ஒன்று அனுப்பியிருக்கிறார்; தந்தியின் நகல் இரயில்வே அமைச்சர் டி. ஏ. பாய்க்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அனுப்பியுள்ள தந்தியின் விவரமாவது:—

"தென்னிந்திய இரயில்வே போராட்டக் குழு உறுப்பினர் ஒருவர் என்னைச் சந்தித்துப் பேசுகையில், எட்டுக் கோரிக்கைகளை வைத்து -- அவைகளை ஏற்றுக் கொண்டால் வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெறலாம் என்ற கருத்தைச் சொன்னார்.

"நான் அவரிடத்திலே பேசியதன் மீது, உடனடியாக கைதானவர்கள் அத்தனைபேரும் விடுதலை செய்யப்பட வேண்டும் -- வேலைநிறுத்தம் காரணமாக துறை நடவடிக்கையோ, நீதிமன்ற நடவடிக்கையோ கூடாது -- பணித் தண்டிப்பு நடவடிக்கைகள் கூடாது -- இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக ஏற்றுக் கொண்டால், வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதாக என்னிடம் அந்தப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

"நடைபெற்று வருகின்ற வேலைநிறுத்தத்தால் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரிய சங்கடத்தையும், சாமான் போக்குவரத்துத் தடைபடுவதால் ஏற்படுகின்ற துன்பங்களையும் மனதில் கொண்டு மத்திய அரசு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

"இது ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தவும், வேலைநிறுத்தம் நின்ற பிறகு மற்ற பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளவும் வழிவகுக்கும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும்.

"யாரும் இந்தப் பிரச்சினையில் தலையிடக் கூடாது -- என்று இரயில்வே அமைச்சர் கூறியிருக்கிறார்; பொதுமக்களுடைய நலன் கருதி நான விடுக்கின்ற வேண்டுகோளைத் தயவுசெய்து தலையீடாகவோ -- அரசியலாகவோ கருதாமல் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்."

மேலும் அத்தந்தியில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருப்பதாவது:—

"இந்தப் போராட்டத்திற்கு ஒரு முற்கால வரலாறு உண்டு; 1968 ஜூன் மாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பேராசிரியர் க. அன்பழகன், முரசொலி மாறன், தா. கிருஷ்ணன், அனந்தநம்பியார், மாயவன் ஆகியோர், ‘லோகோ ரன்னிங் ஸ்டாப்’ ஊழியர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக 1968 ஜூன் 13-ந் தேதி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் தலையிட்டு, பிரச்சினைகளைத் தாமே தீர்ப்பதாக ஒரு அறிக்கை விடுத்தார்.

அப்போது முதலமைச்சர்களாக இருந்த அண்ணா -- பிரும்மானந்த ரெட்டி -- நம்பூதிரிபாடு -- வீரேந்திர பாட்டீல் ஆகியோரும் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, தலைமையமைச்சரிடத்தில் நிலைமைவிளக்கம் செய்திருக்கிறார்கள்; அந்த அடிப்படையிலே உறுதிமொழிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

பிறகு 1970-ல் அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதற்காக நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் நான் தலையிட்டு மத்திய இரயில்வே அமைச்சருடன் பேசிய பின் வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது.

அந்த வேலைநிறுத்தம்நடைபெற்ற ஆறு நாட்களையும் பணித் துண்டிப்பு நாட்களாக ஆக்கக் கூடாது என்ற இரயில்வேத் தொழிலாளர்களின் கோரிக்கையை நான் அப்போதே இரயில்வே அமைச்சரிடம் வலியுறுத்தி இருக்கிறேன்; அது இதுவரையில் செயல்படவில்லை."

இந்தியப் புலிகள்

பாதுகாக்க ரூ.6கோடியில்திட்டம்

புதுடில்லி, செப். 9—

இந்தியக் காடுகளில் உள்ள புலிகளைக் காப்பாற்ற ரூ. 6 கோடி செலவில் மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது; ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்தியாவில் 40,000 ரம் புலிகள் இருந்தன; இப்போது எடுக்கப்பட்ட கணக்குப்படி, 1,827 புலிகள்தான் இருக்கின்றன.

தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்தியக் காடுகளில் புலி இனமே அழிந்து போகக் கூடிய நிலைமை இருக்கிறது; எனவே புலிகளைப் பாதுகாக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது; இதன்படி, ரூ 6 கோடி மதிப்புள்ள திட்டம் தயாராகியிருக்கிறது.

அசாம், பீகார், ஒரிசா, உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மராட்டியம், மைசூர் ஆகிய மாநிலங்களில் புலிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

புலிகளை வேட்டையாடுவதைத் தடுக்கத் தனிப்படை -- காடுகளில் தீ பிடிப்பதைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்படும்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைமைச் செயற் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களின் விவரம்

5—9—72-ல், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டம், பேரவைச் செயலாளர் திரு எம். செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் கருத்து விளக்கத்திற்குப்பின், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

இரங்கல்

சுயமரியாதை இயக்கக் காலம் தொட்டு சமுதாய மறுமலர்ச்சிப் பணியிலும் -- தொடர்ந்து கழகப் பணிகளிலும் அல்லும் பகலும் அயராது ஈடுபட்டுவந்த கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு. காஞ்சி மணிமொழியார் மறைவு குறித்து வருந்துவதுடன், அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அண்ணா பிறந்த நாள் விழாவில் பங்கேற்பு

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவினையொட்டித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்துள்ள முன்னேற்றச் சங்கங்கள் அனைத்தும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவினை மிகச் சிறப்பான வகையில் கொண்டாட வேண்டுவதற்கான பணிகளில் ஈடுபடுவதென்று தீர்மானிக்கப்பட்டது; விழாவினையொட்டி ஆங்காங்கு கழக அமைப்புக்களில் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஊர்வலங்கள் -- பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் அனைத்துத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களும் பங்கு கொண்டு பணியாற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.

தற்காலிக நீக்கம்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் எல்லாப் பொறுப்புக்களிலுமிருந்து திரு. பா. மாணிக்கவாசகம் பி. ஏ. பி. எல். அவர்களைத் தற்காலிகமாக விலக்கி வைப்பதென்று இச்செயற்குழு முடிவு செய்கிறது.

துணைக் குழுக்கள் செயல்படும் முறைகள்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நடவடிக்கைகளை மாவட்டந்தோறும் முறைப்படுத்தித் தொழில்வாரியாகப் பரவலாகச் செயல்படுத்துவதற்கு உரிய வகையில் துணைக் குழுக்களின் பணிகள் பற்றியும், அவை செயல்பட வேண்டிய முறைகள் பற்றியும் பொதுச்செயலாளர் எடுத்து விளக்கியதன்மீது அனைவரும் தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்; இந்த துணைக் குழுக்களின் வேலை முறைகள் பற்றிய செயற் குறிப்பு சம்பந்தப்பட்ட நடைமுறை விதிகள் குறித்துப் பொதுச்செயலாளர் பூர்வாங்கமாக நகல் தயாரித்துச் செயற்குழு உறுப்பினர்களின் பரிசீலனைக்கு அனுப்பிவைப்பதென்றும், அதன்மீது கருத்துக்கள் கோரப் பெற்று, அடுத்த செயற்குழுவில் தீர்வு காண்பதென்றும் செயற்குழு முடிவு செய்கிறது.

பேரவைத் தேர்தல்

செப்டம்பர் 16-ந் தேதியை எட்டிய அளவில் பேரவைத் தேர்தல் நடத்துவதில் உள்ள சிரமங்கள் பற்றியும், அந்தந்த ஆண்டில் பேரவையில் இணைகின்ற தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களின் புத்தாண்டுத் தேர்தல் நடைபெறும்போதே பேரவைப் பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வும் நடத்தப்படவேண்டிய அவசியம் குறித்தும் கலந்து பேசப்பட்டது; உறுப்பினர்களின் கருத்துக்குப்பின் பேரவையின் தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்திக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஐ. என். டி. யு. சி. போக்கு -- பேரவையின் முடிவு

இந்தியா முழுவதிலும் உள்ள 75,000 சிமெண்டுத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு -- பஞ்சப்படி இவைகள் உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் பற்றி நேரடிப் பேச்சுவார்த்தைகளில் சுமூகமான உடன்பாடு ஏற்படாததால், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையும் உள்ளிட்டு 7 மத்திய தொழிற்சங்க சம்மேளனங்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதென முடிவு செய்யப்பட்டது; மத்திய அரசினர் இந்த பேச்சுவார்த்தைக்கென ஏழு பேர்கொண்ட குழுவினை நியமித்திருந்தார்கள்; இந்தப் பேச்சுவார்த்தைக் குழுவினரும பம்பாயில், வட்டாரத் தொழில் கமிசனர் முன்னிலையில் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி -- அதிலும் சுமூகமான தீர்வு ஏற்படவில்லை; அதன் பின்னர், 17-8-72 முதல் வேலை நிறுத்தம் நடத்துவதென்றும் இப் போராட்டத்தில் இறுதியாக எந்த முடிவு எடுக்கப்படுவதானாலும், போராட்டக் குழு கூடித்தான் முடிவு எடுக்கவேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்தது; வேலை நிறுத்தத்தை முடித்துவைத்து மத்திய தொழிலாளர் அமைச்சர் திரு. கடில்கார் 21—8—72-ம் நாளன்று டெல்லியில் ஒரு பரிந்துரை செய்தார்; அப்பரிந்துரை, தொழிலாளர்களுக்கு மனநிறைவு அளிக்காவிடினும் சமரசத் தீர்வு ஏற்படுவதற்குப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒரு அடிப்படை அமைந்தது; இதற்கிடையில், திடீரென்று எந்த மத்திய சம்மேளனத்துடனும் கலக்காமல் ஐ.என்.டி.யு.சி. நிர்வாகிகள் தாங்களாகவே மத்திய அமைச்சர்களை சந்தித்துப் பேசினார்கள்; இந்தப் பேச்சுவார்த்தை நடத்துவதில் இந்திய அரசு நியமித்திருந்த கூட்டுப் பேச்சுவார்த்தைக் குழு முழுவதுமே கலந்துகொள்வதற்கும் மத்திய அரசின் தொழிலாளர் துறையும் எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை; அது மட்டுமின்றி மத்திய தொழிலாளர் அமைச்சர் செய்திருந்த பரிந்துரை நடைமுறை சாத்தியமற்றது என்று தள்ளி இடைக்கால ஊதிய உயர்வாக ரூ 25 மட்டும் கொடுத்து அதுவும் 1972-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாளிலிருந்துதான் கொடுக்கப்படும் என்றும், ஊதிய உயர்வில் திட்டவட்டமான முடிவுகள் ஏதும் இல்லாமல் ஐ.என்.டி.யு.சி. கூட்டுப் போராட்டக் குழுவைக் கலந்துகொள்ளாமல் தனிச்சையாக இடைக்காலப் பரிந்துரையை ஒப்புக்கொண்டதுடன் -- வேலைநிறுத்தத்தையும் ஒருதலைப்பட்சமாக முடித்துக் கொள்வதற்கு அறிவித்தது தொழிற் சங்க ஐக்கியத்தைத் தகர்த்தெறிவதாக அமைந்துள்ளது; நாடு முழுவதும் உருவாகிய ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பதாக அமைந்தது; மத்திய அரசினரும் இத்தகைய பொதுப் பிரச்சினைகளில், தங்கள் கட்சி ஆதரவாளர்களை ஊக்குவிக்கின்ற வகையில் நடந்துள்ள போக்கு முறையற்றதாகும்; நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள சிமெண்டு ஆலைத் தொழிலாளர்களின் ஒற்றுமையை எக்காரணத்தாலும் சிதறவிடக் கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு வேலைநிறுத்தத்தை முடிப்பதானாலும், ஒற்றுமையாகவே முடிக்க வேண்டுமென்கிற வகையில் தீர்மானிக்கப்பட்டு -- அனைத்துத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது; சிமெண்டு ஆலைத் தொழிலாளர்களின் இறுதியான ஊதிய உயர்வு -- பஞ்சப் படி நிர்ணயம் உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் விரைவில் தீர்வு காணப்படவும், அதன்மூலம் தொழிலாளர்கள் போதிய பலன்களைப் பெறுவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

மலைத் தோட்டத் தொழிலாளர் நலனுக்கு நடவடிக்கை

தமிழகத்திலுள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அண்மையில் ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தம் பற்றியும், தற்போதுள்ள தோட்டத் தொழிலாளர்களது கோரிக்கைகள் பற்றியும் இந்தச் செயற்குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, தமிழக மலைத் தோட்டங்களில் பணியாற்றும் ஆண்-பெண் தொழிலாளர்கள், சூபர்வைசர்கள், ஸ்கில்டுகள் ஆகிய அனைத்துப் பிரிவினருக்கும் பஞ்சப் படி என்கின்ற வகையில் எந்தவிதமான தொகையும் தற்போது தரப்படவில்லை; எனவே பஞ்சப் படி என்கின்ற வகையில் அனைவருக்கும் உரிய தொகை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று இச்செயற்குழு முடிவு செய்கிறது.

இணைத்துக்கொள்ள ஒப்புதல்

கடந்த 25—6—72 செயற்குழுக் கூட்டத்திற்குப் பின், 5—9—72 தேதிய செயற்குழுக் கூட்டம் வரையிலும் பேரவையில் இணைந்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் அளித்துச் சேர்ந்துள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களை பேரவையில் இணைத்துக் கொள்வதற்கு இப்பேரவை செயற்குழு அங்கீகாரம் அளிக்கிறது.

சிறப்புக் கூட்டங்கள்

கோவை, திருச்சி, தஞ்சை ஆகிய பகுதிகளில் சிறப்புக் கூட்டங்கள் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொண்டு செயல்படுவதென்று இந்தப் பேரவை செயற்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது; ஏற்கனவே கோவை சிறப்புக் கூட்டம் இருமுறை ஏற்பாடு செய்யப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், விரைவாக அதனை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவதென்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

சேலம் தொழிலாளர் மாநாடு

சேலம் தொழிலாளர் மாநாட்டினை மிக விரைவாக நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென்று இச்செயற்குழு ஒருமனதாக தீர்மானிக்கிறது.

செயற்குழு ஏற்பு

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைக்கு மேலும் 10 செயற்குழு உறுப்பினர்கள் நியமித்துக்கொள்வதற்குப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு ஏற்கனவே பொதுக்குழுக் கூட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது பற்றியும், அதனை தாமதித்து நியமனம் செய்யவேண்டிய சூழ்நிலைகள் பற்றியும் பொதுச்செயலாளர் விளக்கியதை இச்செயற்குழு ஏற்றுக்கொள்கிறது.

இதுவரையில் பேரவையில் இணைந்துள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள் ஆங்காங்கு தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள பொதுக்குழு உறுப்பினர்களை இந்த ஆண்டிற்குரிய பேரவை பொதுக்குழு உறுப்பினர்களாக இச்செயற்குழு அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறது.

இறுதியில் பேரவைச் செயலாளர் மேட்டூர் அ. பாலு நன்றி கூறினார்.

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் விளைவு

பல மாவட்டங்களில் வறட்சி நிலை

பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த நிதியுதவி

சென்னை, செப். 12—

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பருவமழை தவறியதன் காரணமாக வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவி தேவை என்றும் அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன; இயற்கை இடையூறுகளையும் -- பருவமழை தவறிய நிலையையும் உணர்ந்ததால் அரசு ஒரு முடிவு எடுக்கும் அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறது.

எனவே, வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பருவமழை தவறியது பற்றி ஆய்ந்து -- அவசியமான நிவாரணப் பணி பற்றி யோசனைகளைச் சொல்லுமாறு அரசு பணித்தது.

அதன்படி, வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் மாவட்டங்களுக்குப் பயணம் செய்தனர்; பருவ மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகள் பற்றிய யோசனைகளை அரசுக்கு அளித்துள்ளனர்; அவர்களது யோசனைகளை ஏற்று அரசு உத்தரவுகளைப் பிறப்பித்தது.

பருவமழை தவறியதன் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் எங்கெங்கு குடிநீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதோ அந்தப் பகுதிகளில் உள்ள குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கப் பணத்தில் எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தேவை என்பதை அறிந்து -- அவற்றைப் பகிர்ந்து கொடுக்கும்படி வருவாய்த் துறை வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வறட்சிப் பகுதிகளில் நில வரி வசூல் தள்ளிவைப்பு

‘வறட்சிப் பகுதிகள்’ என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அரசுக்குச் சேரவேண்டிய நில வருவாய் -- கடன் -- விவசாய வருமான வரி பாக்கி ஆகியவை டிச. 31-ம் நாள்வரை தள்ளிவைக்கப்படுகிறது.

மற்றப் பகுதிகளில், ஏற்கனவே செயலில் இருக்கும் வரி வசூலிப்பு பற்றிய உத்தரவு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இத்தகவலை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

அரசு உத்தரவு விவரம்

இத்தொடர்பிலான அரசின் மற்றோர் உத்தரவு வருமாறு:—

"வருவாய்த் துறை வாரியம் (நில வாரியம்) நாட்டில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவது பற்றி மாவட்ட ஆட்சியாளர்கட்குக் கீழ்க்கண்ட (வழிகாட்டும்) முறைகளைக் கடைபிடிக்குமாறு சொல்ல வேண்டும்:—

"பொது குடிநீர்க் கிணறுகளை மட்டும் ஆழப்படுத்தும் பணிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்; தனிப்பட்டோர் கிணறுகளை எடுத்துக்கொள்ளக் கூடாது.

மாவட்ட ஆட்சியாளரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரோ அல்லது தொடர்புடைய வட்டார வருவாய்த் துறை அதிகாரியோ முன்கூட்டியே அளவுகள் எடுக்காமல், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் இல்லாமல் எந்தப் பணியும் செய்யக்கூடாது.

குடிநீர்ப் பற்றுக்குறை உள்ள பகுதிகளில்தான இந்தப் பணிக்கு அனுமதி தரப்பட வேண்டும்; நிலைமை சீரடைந்தால் அனுமதி தேவையில்லை; அவசியமில்லையெனில், அந்தப் பணி நிறுத்தப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக இந்தப் பணியின் முன்னேற்றத்தைக் கவனிக்க வேண்டும்; வாரியத்துக்கு 15 நாளுக்கு ஒரு முறை அறிக்கை அனுப்ப வேண்டும்."

வறட்சித் துயர் தணிப்பு

தமிழ்நாட்டில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு

திருச்சி செப். 8—

வறட்சித் துயர் தணிப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 25 இலட்சத்தில் தர்மபுரி மாவட்டத்துக்கு மட்டும் ரூ. 5 இலட்சம் வரையில் செலவிடப்படும்.

மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி வருமாறு:—

சேலம், கோவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 3.50 இலட்சம்.

இராமநாதபுரம் ரூ. 3 இலட்சம்.

திருச்சி, மதுரை ஒவ்வொன்றுக்கும் ரூ. 2 இலட்சம்.

திருநெல்வேலி, தென்னாற்காடு ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம்.

கோவையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

பெங்களூர், செப். 5—

தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாவட்டமான கோவையில் இத் திங்கள் 12-ம் நாளிலிருந்து அக்டோபர் 11-ம் நாள் வரையிலான ஒரு மாத காலத்தில், 25,000 ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் நோக்கத்துடன் குடும்பக் கட்டுப்பாடு முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் ஒவ்வொரு நபரும் இம் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நிலையத்தின் குறைந்தபட்சம் 6 நாட்கள் தங்கி தங்கள் உடல்நலனைப் பாதுகாத்துக் கொள்ளுவார்.

மேலும், இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அளிக்கப்படும்; மருந்துகள் -- இடவசதி -- உணவு ஆகியவற்றிற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ 40 செலவிடப்படும்.

விருந்துகளுக்குக் கட்டுப்பாடு

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தாக்கீது

புதுடில்லி, செப் 9—

விருந்தினர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் எல்லா மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு ஓர் உத்தரவு அனுப்பியிருக்கிறது.

திருமணம் மற்றும் விழாக்களில் கலந்து கொள்ளும் விருந்தினர்களைக் கட்டுப்படுத்தும்படி அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருக்கிறது; அதன் விவரம் வருமாறு:—

"திருமணம் மற்றும் இறுதிச் சடங்கின்போது ஒரே சமயத்தில் 50 முதல் 100 விருந்தினர்களே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

மற்ற விழாக்களில் 25 விருந்தினர்கள் கட்டுமே கலந்துகொள்ள வகைசெய்யவேண்டும்.

இந்தியாவின் சில பகுதிகளில் வறட்சி தொடர்ந்து நீடிப்பதாலும் -- விலைவாசி ஏறிக் கொண்டே போவதாலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; இந்த உத்தரவு உடனடியாக செயலுக்கு வருகிறது.

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

சென்னை 98-வது வட்டத்தில் ஏற்பாடு

31—8—72 அன்று சென்னை 98-வது வட்ட தி.மு.க. செயற்குழு -- துணை மன்ற நிர்வாகிகள் -- கழக முக்கியஸ்தர்கள் ஆலோசனைக் கூட்டம், திரு. சு. அரிகிருஷ்ணன் எம்.சி. தலைமையில் நடந்தது.

அண்ணா பிறந்த நாள் விழாவை 15—9—72 முதல் 24—9—72 வரை ஒவ்வொரு துணை மன்றத்தின் சார்பிலும் அந்தந்தப் பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு துணை மன்றமும் அந்தந்தப் பகுதியில் பொதுமக்களின் பார்வைக்கு ஏற்ற இடங்களில் 64 அடி உயரத்தில் கொடிச் சம்பம் நிரந்தரமாக அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வட்டக் கழகச் சார்பில் 17-9-72-ல் விழா எடுப்பதென்றும், விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக அண்ணா அவர்களின் 64-ம ஆண்டு பிறந்த நாளைக் குறிக்கின்ற வகையில் 64 கொடிகள் -- 64 கழக உறுப்பினர்களைக் கொண்டு வட்ட நகர மன்ற உறுப்பினர் தலைமையிலும், செயலாளர் முன்னிலையிலும் ஏற்றுவதென முடிவெடுக்கப்பட்டது.

அண்ணா அவர்களின் பிறந்த நாளை எந்தத் துணை மன்றம் (98-வது வட்டத்தைச் சேர்ந்தது) சிறப்பாகக் கொண்டாடுகிறதோ அந்தத் துணை மன்றத்துக்கு வட்டக் கழகத்தின் சார்பில் வட்டக் கழகப் பொருளாளரின் சொந்தச் செலவில் அண்ணா அவர்களின் முழு உருவச் சிலை அன்பளிப்பாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்டக் கழகம் நடத்தவிருக்கும் 17—9—72-ம் நாள் ஊர்வலத்திற்குத் துணை மன்றங்கள் -- வட்டக் கழகம் ஆகியவை சார்பில் அலங்கார வண்டிகள் அனுப்புவதெனவும், 64 கழகத் தோழர்கள் சீருடை அணிந்து ஊர்வலத்தில் கலந்துகொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பு:—98-வது வட்டம் டாக்டர் தர்மாம்பாள் நினைவு மன்றத்தின் சார்பில் வட்டத் துணைச் செயலாளர் தலைமையில் அலங்கரிக்கப்பட்ட அண்ணா திருவுருவப் படம் வாண வேடிக்கைகளுடன், சிலம்பம் -- புலிவேடம் -- கரக ஆட்டங்களுடன் வட்டத்தின் முக்கிய வீதிகளில் வலம்வரும்.

மாவட்டந்தோறும் விளையாட்டு அரங்குகள்

தமிழக அரசு ஏற்பாடு

வேலூர், செப். 12—

"ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது"

என்று, அரசாங்கப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பி. சுப்பையா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இதுபற்றி அவர் விளக்கியதாவது:—

"தமிழ்நாட்டில் 29 விளையாட்டு அரங்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இதற்காக அரசாங்கம் ரூ. 7 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது; 14 மாவட்டங்களிலும் இந்த அரங்குகள் அமைக்கப்படும்.

விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படும் நகரங்களின் விவரம் வருமாறு:—

சென்னை.

செங்கற்பட்டு மாவட்டம்:— திருவள்ளூர்.

தர்மபுரி மாவட்டம்:—கிருஷ்ணகிரி.

தென் ஆற்காடு:—விழுப்புரம், திண்டிவனம்.

சேலம் மாவட்டம்:—ஆத்தூர், நாமக்கல்.

கோவை:—திருப்பூர், ஈரோடு, உடுமலைப்பேட்டை.

திருச்சி:—கரூர், புதுக்கோட்டை.

தஞ்சை:—திருவாரூர், மாயூரம், நாகப்பட்டினம்.

மதுரை:—பெரியகுளம், திண்டுக்கல்.

இராமநாதபுரம்:—சிவகங்கை, அருப்புக்கோட்டை, இராஜபாளையம்.

நெல்லை:—தூத்துக்குடி, கோவில்பட்டி.

கன்னியாகுமரி:—நாகர்கோவில், கன்னியாகுமரி.

நீலகிரி:—கூனூர்.

சென்னை திருவள்ளுவர் கோவில்-- ‘கலைக் கோயிலாக’த் திருத்தியமைக்கப்படும்

சிற்பக் கலைக்கூடம் -- நூலகம் -- திருமண மண்டபம் ஏற்படுத்தத் திட்டம்

முதலமைச்சரைப் புரவலராகக்கொண்ட திருப்பணிக்குழு அமைப்பு

சென்னை, செப். 12—

சென்னை -- மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பித்த -- அதைச் சிறந்த கலைக் கோயிலாக அமைக்கத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது; இதற்காகத் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவர் கோயிலை முதலமைச்சர் கலைஞர் அவர்கள்-- தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன், அறநிலைத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன் ஆகியோருடன் சென்று--சுற்றிப் பார்வையிட்டார்; அதன் பின்னர்தான், கோயிலின் மேம்பாட்டுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"பூம்புகாரில் ஓவியங்கள் -- சிற்பங்கள் மூலம் சிலப்பதிகாரம் சித்தரிக்கப்பட்டிருப்பதுபோல், மயிலை -- திருவள்ளுவர் கோயிலில் திருக்குறள் பற்றியும் -- திருவள்ளுவர் பற்றியும் விளக்கும் சிற்பங்களையும், ஓவியங்களையும் கொண்ட கலைக்கூடம் ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது"

என்று அறநிலையத்துறை அமைச்சர் மு. கண்ணப்பன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் இது பற்றி விளக்கிக் கூறியதாவது:—

தமிழ்நாட்டில் திருவள்ளுவருக்கு என்று கோவில் இருப்பது-- சென்னை மைலாப்பூர் முண்டகக் கண்ணியம்மன் தெருவில் இருக்கும் கோவில்தான்; அந்த இடத்தில்தான் திருவள்ளுவர் பிறந்ததாகவும் -- அங்குள்ள இலுப்ப மரத்தடியில் அமர்ந்துதான் திருக்குறளை எழுதியதாகவும் கூறுகிறார்கள்.

அந்த இலுப்பமரத்தின் அடிக்கட்டை இன்றும் அழியாத நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது; அந்த மரத்தின் ஒரு துண்டை ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் எடுத்துச் சென்று பரிசோதனை செய்து பார்த்து, ‘அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மரம்’ என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க திருவள்ளுவர் பிறந்த இடத்தை நல்ல முறையில் பேணிப் பாதுகாப்பது -- ‘இந்த அரசின் தலையாய கடமை’ என்று உணர்ந்து, வள்ளுவர் நினைவை என்றென்றும் பேணும் வகையில் -- வள்ளுவர் கருத்துக்களைச் சிற்பங்களாகவும், ஓவியமாகவும் அமைத்துக் கலைக் கோவில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பூம்புகாரில் செய்திருப்பது போன்று -- இங்கு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே கட்டப்பட்டுவரும் திருமண மண்டபத்தை மேலும் விரிவுபடுத்தி -- மேல் பகுதியில் நூலகம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

மேலும், எந்தெந்த வகையில் திருவள்ளுவர் நினைவாலயத்தைச் சிறப்புமிக்க இடமாகச் செய்யலாம் என்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம்.

அந்தப் பணிகளைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதற்குத் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் குழுவின் புரவலராக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இருப்பார்.

தலைவராகக் குன்றக்குடி அடிகளாரும், செயலாளராக என். மகாலிங்கமும், பொருளாளராக கே. ஈசுவர அய்யரும் இருப்பார்கள்.

குழுவின் உறுப்பினர்கள் விவரம் வருமாறு:—

முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம்.

மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம்.

மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் மு. வரதராசனார்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டி. சுந்தரவடிவேலு.

அரங்கண்ணல் எம்.எல்.ஏ.

டி. என். அனந்தநாயகி எம்.எல்.ஏ.

முரசொலி மாறன் எம்.பி.

துளசிங்கம்.

மற்றும் திருவள்ளுவர் கோவில் அறங்காவலர்கள்.

இந்தக் கோவில் அறநிலையத் துறையின்கீழ் 20 ஆண்டுகளுக்குமுன் வந்தது; கோவிலுக்காக ரூ. 35,000 பணம் இருக்கிறது; ஏற்கனவே இருந்த நிலத்தை விற்றுவந்த பணமாகும்.

இந்தக் கோவிலில் திருவள்ளுவர் சிலையும் -- வாசுகி அம்மையார் சிலையும் இருக்கிறது.

கோவில் -- அதைச் சுற்றியுள்ள நிலம் எல்லாம் சேர்ந்து 2 ஏக்கர் 20 செண்டு ஆகும்; கோபுரம் பழையதாக இருக்கிறது; அதையும் மேம்பாடு செய்து பெரிதாகக் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவரைப் பற்றியும்--- திருக்குறளைப் பற்றியும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் புத்தகங்கள் எழுதியிருக்கின்றனர்; அவற்றையெல்லாம் சேர்த்து நூல் நிலையத்தில் வைக்கப்படும்.

திருப்பணிகளை நிறைவேற்ற நிதி வசூல் செய்வதற்கும் -- பெரிய கோவில்களிலிருந்து பணம்பெறவும் ஏற்பாடுகள் செய்யப்படும்."

திருவாரூர் நகர தி. மு. கழகக் கிளை நிர்வாகப் பொறுப்பாளர் நியமனம்-- தலைமைக் கழக அறிவிப்பு

திருவாரூர் நகர தி. மு. க. கிளையின் நிர்வாகம் செம்மையாக்கப்படுவதற்காகவும் -- நகரில் கழக வளர்ச்சி மேலும் சிறப்புறுவதற்கான வழி ஏற்படுத்தவும் விருப்பம் தெரிவித்து நகர தி. மு. க. கிளை நிர்வாகிகள் மற்றும் மேலமைப்பும் பிரதிநிதி ஆகியோர் விலகிக் கொண்டதையொட்டியும் -- மேலமைப்புகளின் பரிந்துரைப்படியும் தோழர் -- கு. தென்னன் அவர்கள் இன்று முதல், திருவாரூர் நகர தி. மு. க. கிளையின் நிர்வாகப் பொறுப்பாளராகத் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

நகரக் கிளை நிர்வாகக் குழுவுக்கான புதிய தேர்தல் முறைப்படி நடைபெறும் வரையில், கிளையின் நிர்வாக சம்பந்தமான விவரங்கள் அனைத்துக்கும் தோழர் கு. தென்னன் அவர்களிடம் தொடர்புகொண்டு கடமையாற்றுமாறு திருவாரூர் கழகத் தோழர்கள் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

‘அறிவகம்’, சென்னை-13
9—9—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

ஒரிசாவில் கடும் புயல்

ஓராண்டில் இரண்டாவது முறையாக வீசியது

பெரும் பொருட்சேதம்--வீடுவாசல் இழந்து மக்கள் தவிப்பு

புவனேசுவரம், செப். 12—

நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் புயல் காரணமாக ஒரிசாவின் கடற்கரையோரங்கள் பெரும் அளவில் சேதத்துக்குள்ளாயின.

மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் அடித்திருக்கிறது.

கடந்த 12 மாதக் காலத்தில் ஒரிசாவில் ஏற்பட்ட இரண்டாவது புயலாகும் இது.

இந்தப் புயலால் கடும் சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும், பெரும் பொருட்சேதம் ஏற்பட்டிருக்கிறது.

கட்டாக்—பூரி நகரங்களில் மின்சார -- குடிநீர் இணைப்பு -- துண்டிக்கப்பட்டன.

கடந்த அக்டோபர் மாதம் ஏற்பட்ட புயலால் 5,000 பேர் கொல்லப்பட்டனர்.

4,000 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பணி அலுவலர்கள் அனுப்பப்பட்டிருக்குன்றனர்.

துறைமுகத்திலும் -- அதன் கட்டடங்களிலும் கடல் நீர் புகுந்ததால் மக்கள் கட்டடங்களின் கூரைமீது தஞ்சம் புகுந்திருக்கின்றன.

வட நாட்டில் தீண்டாமைக் கொடுமை

தாழ்த்தப்பட்ட மாணவிக்கு பள்ளியில் இடம் மறுப்பு

அலிபாச், செப். 12—

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுமிக்கு வகுப்பு அறைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆநீதி மாராட்டிர மாநிலத்தில் கொலாபா மாவட்டக் கிராமமான 'வசல்' என்ற ஊரில் நடந்துள்ளது.

இங்கே வகுப்பு அறைகள் கோவில் ஒன்றில் அமைந்திருப்பதால்தான் தாழ்த்தப்பட்டவரான அந்தப் பெண்ணுக்கு அனுமதி கிடைக்கவில்லையாம்.

தாழ்த்தப்பட்டவராக இருப்பதால் தனக்கு வீட்டு வசதி கிட்டவில்லை என்று அண்மையில் ஓர் ஆசிரியை புகார் செய்திருந்தார்.

இந்தக் கொலாபா மாவட்டத்தில்தான் டாக்டர் அம்பேத்கார், முன்பு, தீண்டாமை ஒழிப்பு இயக்கம் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வங்க தேசத்தில் 50,000 பேர் அணிவகுப்பு

மாபெரும் பொதுக்கூட்டத்தில் கண்டன முழக்கம்

டாக்கா, செப். 12—

வங்க தேசத்துக்கு எதிராக சீனா கடைபிடித்துவரும் கொள்கையைக் கண்டித்து நேற்று முன்தினம் டாக்காவில் மாபெரும் ஆர்ப்பாட்ட அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது.

ஐ. நா.-வில் வங்க தேசம் அனுமதிக்கப்படாமல் இருப்பதற்கு சீனா, 'வீட்டோ'வைப் பயன்படுத்தியதைக் கண்டிக்க இந்த ஆர்ப்பாட்ட அணிவகுப்பு ஆளும் கட்சியான அவாமி லீகினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சுமார் 50,000 பேருக்கு மேல் இதில் கலந்துகொண்டனர்.

"வங்க தேசத்துக்கு எதிரான சீன--அமெரிக்கக் கூட்டுச் சதியை எதிர்ப்போம்" என்று ஆர்ப்பாட்ட அணியினர் முழக்கமிட்டனர்.

நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தற்காலிகத் தலைமையமைச்சர் சையத் நஜ்ருல் இஸ்லாம் உட்பட பல அமைச்சர்களும், அவாமி கட்சியின் பெரும் தலைவர்களும் கலந்துகொண்டு பேசினர்.

சீன ஆதரவுக் கட்சியின் தலைவரான மௌலானா பாஷானியின் போக்கைச் சட்டம் கடுமையாகக் கண்டித்தது.

"வங்க மண்ணில் ஒரு இந்தியச் சிப்பாயையாவது காட்ட முடியுமா" என்று அவர்கள் பாஷானிக்கு அறைகூவல் விட்டனர்.

"வங்க தேசத்தில் இந்தியத் துருப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுவது திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரமாகும்" என்று அவர்கள் கூறினர்.

இதுபோன்ற சட்டங்களும்--- அணிவகுப்புக்களும் வங்க தேசம் முழுவதும் நடைபெற்றிருக்கிறது.

வங்க தேசத்துக்கு எதிராகச் சீனா பயன்படுத்திய 'வீட்டோ' வங்க தேச மக்களைக் காட்டிக்கொடுக்கும் சீனாவின் இரண்டாவது செயலாகும்" என்று மக்கள் கருதுகின்றனர்.

ஐந்தாவது திட்டத்தில் புதிய தொழில்கள்

20 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டுமாம்

சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் திட்டம்

புதுடில்லி, செப். 12—

5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 1,60 இலட்சம் தொழிற்சாலைகளைத் தவக்க சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டிருக்கிறது; இதன் மூலம் 20 இலட்சம் பேருக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

இதற்காக ரூ. 300 கோடி ஒதுக்க வேண்டுமென்று இந்நிறுவனம் அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதுடன், ரூ. 1 600 கோடி அளவுக்கும் வங்கிகள் கடனுதவி அளிக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறது.

மற்றும் ரூ. 300 கோடி வெளிநாட்டுச் செலாவணியும், 15 இலட்சம் டன் இரும்பு ஒதுக்கித் தர வேண்டுமென்றும் திட்டக் குழுவுக்கு அளித்துள்ள அறிக்கையில் இந்நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டிகள்

படிப்படியாக எடுத்துவிட இரயில்வேத்துறை முடிவு

புதுடில்லி, செப். 7—

முக்கியமற்ற எல்லா இரயில் பாதைகளிலும், இரண்டாவது வகுப்பு இரயில் பெட்டிகளை எடுத்துவிடுவது என்று இரயில்வேத்துறை முடிவு செய்திருக்கிறது.

இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டிகளைச் சிறிது சிறிதாகத் திரும்பப் பெற்று --- இறுதியில் இரண்டாம் வகுப்பையே அடியோடு எடுத்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முதலில், முக்கியமற்ற இரயில்களிலும்--மார்க்கங்களிலும் இரண்டாவது வகுப்பில் சிறிதளவினரே பயணம் செய்யும் மார்க்கங்களிலும்--இரயில்களிலுமிருந்து இரண்டாம் வகுப்புப் பெட்டிகள் எடுபடும்.

தற்போதைக்கு மெயில் இரயில் இரயில்களிலும், எச்ஸபிரஸ் இரயில்களிலும் இரண்டாம் வகுப்புகள் இருக்கும்; பின்னர், இந்தப் பெட்டிகள் பயணத்துக்கு இலாயக்கற்றதாகும்போது அவையும் திரும்பப் பெறப்படும்.

'இண்டர் கிளாஸ்' பெட்டிகள் உற்பத்தி நிறுத்தப்பட்டது போலவே, இரண்டாவது வகுப்பு பெட்டிகளின் உற்பத்தி செய்வதும் நிறுத்தப்படும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

செப். 13 முற்பகல் 11 மணி: காரைக்குடி—நகராட்சிக் கடைகள் திறப்பு; பகல் 12 மணிமுதல் மாலை 4 மணிவரை: கம்பனூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்; 5 மணி: கூத்தலூர்—பொது மக்கள் வரவேற்பு; இரவு 7 மணி: காரைக்குடி தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பொதுக்கூட்டம்.

செப். 14 காலை 7-30 மணி: திருவிடைமருதூர்; 9 30 மணி: தஞ்சை; மாலை 4 மணி: மேக்கிரிமங்கலம்.

செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.

நிகழ்ச்சிகள்

செப். 13: வேலூர் (சேலம்); 15: இராசபாளையம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] தெரு, சென்னை-[illegible] வெளியிடப்படுகிறது

தலைமைக் கழக அறிக்கை

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா---

சொற்பொழிவாளர் பட்டியலில் மாறுதல்

தலைமைக் கழகச் சார்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஊர்கள் -- சொற்பொழிவாளர்கள் பட்டியலில் கீழ்க்காணும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன:—

கோவை: அமைச்சர் ம. உ. சண்முகம்.

புதுவை: முதலமைச்சர் எம். ஓ எச். பாரூக்.

திண்டுக்கல்: கே. விநயகம் எம்.எல்.ஏ.

செப்பனூர்கோயில்: எல். கணேசன் எம்.எல்.ஏ.

மதுரையில் செப்டம்பர் 15-ம் நாளன்று அமைச்சர் ம. உ. சண்முகம் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கூட்டம் 17-ம் நாள் ஞாயிறன்று நடைபெறும்.

இத்தகவலை துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தெரிவித்தார்.

சேலம் நகரில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

சேலம் நகரில் ஒவ்வொரு வட்டத்திலும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அமைச்சர்கள் -- முன்னணித் தோழர்கள் -- நிகழ்ச்சிகள் பற்றி மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி. அறிவிப்பதாவது:—

செப்டம்பர்

15: ஏ. வி. பி. ஆசைத்தம்பி
16: கனகசபை
17: சக்தி கதிர்வேல்
அமைச்சர் செ. மாதவன்
18: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா
20: எம். எம். பீர் முகம்மது
21: சிலம்புச் செல்வர் ம.பொ.சி.--பட்டி மன்றம்
22: குமாரி விஜயா கலை நிகழ்ச்சி
23: நாகூர் அனீபா இசை நிகழ்ச்சி
முரசொலி அடியார் நாடகம்
24: முரசொலி அடியார் நாடகம்
மணி -- சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி
25: அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்
27: தமிழரசி எம்.சி.
28: கே. விநாயகம்
29: கோபி தமிழரசன்
30: திருவை அண்ணாமலை
அக். 1: வி. எஸ். கோவிந்தராசன்

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

செப். 14 காலை 9 மணி: சித்தரசூர் ஊராட்சி வரவேற்பு; நண்பகல் 12 மணி: பண்ருட்டி; மாலை 3-30 மணி: புலவனூர்—அரிசனக் காலனியில் கலைஞர் நற்பணி மன்றத் திறப்பு; 4 30 மணி: கண்டரகோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தல்.

செப். 15 மாலை 3 மணி: கல்லம்பரெட்டி பாளையம் காலனியில் மேநிலை நீர்த்தொட்டி திறந்துவைத்தல்; 4 30 மணி: வளவலூர் ஊராட்சி மன்ற வரவேற்பு; 5 மணி: மேநிலை நீர்த் தொட்டிக்கு அடிக்கல் நாட்டுதல்; 5 30 மணி: அரிசனங்கட்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்குதல்; 6 மணி: அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்; இரவு 8 மணி: பாண்டிச்சேரி— அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்.

பேச்சாளர் முகவரி:

இரா. வெற்றிகொண்டான்,
கலைஞர் இல்லம்,
செயங்கொண்ட சோழபுரம்,
திருச்சி மாவட்டம்.

நெல்லை காதர்,
நடுத் தெரு,
அயன்பொட்டல் புதூர்,
நெல்லை மாவட்டம்.

கலைக் குழு முகவரி:

வேடசந்தூர் அறிஞர் அண்ணா கலைக் குழுவினரின் 'கலைஞர் நல்லாட்சி' எனும் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

வி. நாகசுந்தரம்,
வட்டத் துணைச் செயலாளர்,
வேடசந்தூர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

13--9--72

தரணிக்கோட்டகம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிச்கு கடைத் தெரு அருகில்; தலைவர்: கோ. இராமசாமி; பேசுவோர்: சி. பி. சனகசபை எம்.சி., மா. மீனா சிசுந்தரம் எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம், செ. யூசுப், பி. பன்னீர்செல்வன், சிவ. ஜெயக்குமார், எஸ். எம். ரெங்கசாமி, வே. கோதண்டபாணி, மருதூர் குமரவேல், ச. சிதம்பரன் மற்றும் பலர். (இரவு 9-மணியளவில் முருகு பாண்டியன் குழுவினரின் 'அபாய அறிவிப்பு' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

கோவில்பட்டி

தி. மு. கழகச் சார்பில் இரவு 7-மணிக்கு காந்தி மைதானத்தில்; தலைவர்: எம். பி. அழகிய நம்பி; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், மு. பெரியசாமி, எம். ஆர். சனார்த்தனன் மற்றும் கழகத் தோழர்கள்.

14--9-72

கோபி

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியார் திடலில்; தலைவர்: டாக்டர் எஸ். எம். பழனியப்பன் எம்.எல்.ஏ.; பேசுவோர்; அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, முரசொலி மாறன் எம்.பி., சிட்டிபாபு எம்.பி., மா. முத்துசாமி எம்.பி., மாயவன் எம்.பி., கமலநாதன் எம்.பி., மாதா கவுடர் எம்.பி., எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி., மு. இராமநாதன் எம்.எல்.சி., ஜி. என். இராசு எம்.எல்.சி., வி. வி. வெங்கடாசலம், கே. எஸ். ஆனந்தன். (நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-ம் ஆண்டும் பிறந்த நாளையொட்டி கோபி நகரப் பள்ளி ஏழை மாணவ -- மாணவியர் 145 பேருக்கும் சீருடையும், மொடச்சூர் நகர் மன்றப் பள்ளிக்கு எழுத்து மேசைகளும், 10,000 குழந்தைகளுக்கு இனிப்பும் நகர தி. மு. க. சார்பிலும்--அனைத்து மன்றங்களின் சார்பிலும் வழங்கப்படும்.

கவரப்பாளையம் ஊராட்சிமன்றம்

புதிய வீதிகளுக்குத் தலைவர்கள் பெயர்

கவரப்பாளையம் ஊராட்சி மன்றத்தில் இதுவரை பெயரிடப்படாமல் இருந்த வீதிகளுக்கு கீழ்க்கண்ட பெயர்களை வைத்திருப்பதாக ஊராட்சிமன்றத் தலைவர் கே. சௌந்தரராசன் அறிவிக்கிறார்.

அறிஞர் அண்ணா வீதி
கலைஞர் கருணாநிதி சாலை
நாவலர் நெடுஞ்செழியன் வீதி
எம். ஜி. ஆர். வீதி
மேதை மதியழகன் வீதி
பெரியார் சாலை
திருவள்ளுவர் சாலை
கலைவாணர் வீதி